2015 பிப்ரவரி 19]

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளில் விளையாட்டுத் திடல் அமைப்பதற்கு 6 முதல் 7 ஏக்கர் இடம் வேண்டும். அந்த இடம் பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய இடமாக இருக்கவேண்டும். அதோடு அங்கு போக்குவரத்து வசதி உள்ள இடமாகவும் இருக்கவேண்டும். திருச்சி மாவட்டத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் பைகா என்ற திட்டத்தின்மூலம் 20 கிராமங்கள் Phase-I–லும், 20 கிராமங்கள் Phase-II-லும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் விளையாட்டு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பைகா திட்டத்தின்மூலம் ஒரு கிராமத்திற்கு தளம் அமைக்க ரூ.75,000/–மும், உபகரணங்கள் வாங்க ரூ.25,000/–மும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 'பைகா திட்டம்' 'Rajiv Gandhi Khel Abhiyan' என்ற திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் ஒரு மாவட்டத்தில் இரண்டு ஊரகப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளது. ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த இடத்தில் விளையாட்டுத் திடல் அமைக்கும் கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக துறைக்குப் பரிந்துரைக்கப்பட்டால், துறை ரீதியாக Rajiv Gandhi Khel Abhiyan என்ற திட்டத்தின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

28—

நூலகம்

***22762—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியம், பாப்பம்பட்டியில் முதற்கட்டமாக பகுதிநேர நூலகம் திறப்பதற்கு இலவசமாக இடவசதி மற்றும் உரிய நிபந்தனைகளை நிறைவேற்றித் தருமாறு அவ்வூராட்சி மன்றத் தலைவருக்கு தருமபுரி மாவட்ட நூலக அலுவலரால் 24–1–2014 அன்று கடிதம் எழுதப்பட்டது. அவ்வூராட்சி மன்றத் தலைவரிடமிருந்து இதுநாள்வரை பதில் பெறப்படவில்லை. நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, பாப்பம்பட்டியில் பகுதிநேர நூலகம் அமைப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லம்பள்ளி ஒன்றியம், பாப்பம்பட்டி பகுதியில் சுமார் 1,500–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு நூலக வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால், அவர்கள் படித்துப் பயன்பெற ஏதுவாக இருக்கும். நூலகம் அமைப்பது தொடர்பாக பஞ்சாயத்துத் தலைவரிடம் கருத்துரு கேட்டிருப்பதால், இதனை அரசுக்குப் பரிந்துரை செய்ய வலியுறுத்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியில், தருமபுரி மாவட்ட மைய நூலகமும், இலளிகம், அதியமான்கோட்டை, பாளையம்புதூர் மற்றும் இலக்கியம்பட்டி ஆகிய ஊர்களில் கிளை

2015 பிப்ரவரி 19]

நூலகங்களும், சாமிசெட்டிப்பட்டி, ஏலகிரி, கடகத்தூர், நல்லம்பள்ளி, வெங்கட்டம்பட்டி, ஏ.ஜெட்டிஅள்ளி, வீ.குட்டூர், பாளையத்தானூர், கிருஷ்ணாபுரம் மற்றும் நாயக்கன்கொட்டாய் ஆகிய ஊர்களில் ஊர்ப்புற நூலகங்களும், ஈச்சம்பட்டி, முக்கல்நாயக்கன்பட்டி, பரிகம் மற்றும் பாளையம் ஆகிய ஊர்களில் பகுதிநேர நூலகங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

நூலகம் செயல்பட வாடகையில்லா கட்டடம் நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்படவேண்டும். சொந்தக் கட்டடம் கட்டிட, 5 சென்ட் காலி மனை நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தரப்படவேண்டும். ரூபாய் ஆயிரம் வீதம் நன்கொடையாகச் செலுத்தி, இரண்டு பேர் புரவலர்களாகச் சேரவேண்டும். நூலக உறுப்பினர் சந்தா மற்றும் காப்புத் தொகையாக ரூ.30/– செலுத்தி, 200 பேர்கள் நூலக உறுப்பினர்களாகச் சேரவேண்டும். சுமார் 2 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் இலவசமாக வழங்கப்படவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாப்பம்பட்டியில் நூலகம் அமைத்திட மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்ற காரணத்தினால், மேற்படி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அங்கு பகுதிநேர நூலகம் அமைப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக இங்கே பதிலை அளித்தார்கள். தமிழகத்திலுள்ள மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில், மாவட்டந்தோறும் ஒரு நடமாடும் நூலகம் ஏற்படுத்தவேண்டும். அரசுப் பள்ளிகளில் உள்ள நூலகங்கள் செயல்படாமல் உள்ளன. குறிப்பாக, தருமபுரி அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, தருமபுரி ஔவையார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அதியமான்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் இருக்கின்ற நூலகங்கள் செயல்படாமல் இருக்கின்றன. இதுபோன்ற நூலகங்களை உடனடியாகச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழகத்தில் அனைத்து நூலகங்களையும் மின்னணு நூலகங்களாக அமைத்து, கம்ப்யூட்டர் வசதி செய்து, இன்டர்நெட் இணைப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள நகர்ப்புற, கிராமப்புற மற்றும் ஊர்ப்புற அரசு மற்றும் தனியார் பள்ளிகளில், கல்லூரிகளில் உள்ள நூலகங்களின் விவரங்களையும், அங்குள்ள நூல்களின் விவரங்களையும் இணையதளத்தில் வெளியிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் அரசின் சார்பில் புத்தகக் கண்காட்சி நடத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு அப்பாற்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கேள்விகளை இங்கே தொடுத்திருக்கிறார். அனைத்து கேள்விகளையும் அவர் எழுத்துமூலம் தெரிவித்தால், அவற்றை உரிய முறையில் ஆய்வு செய்து, அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

மரம் நடும் திட்டம்

***8707—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—